

# பனிமயம்

ஜூன் 2021

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





## பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்புக்குரியவர்களே,

உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

இயேசுவின் திரு இதய அன்பும், இரக்கமும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக.

கடந்த மாதத்தில்தான் எத்தனை எத்தனை நிகழ்வுகள் நடந்துவிட்டன, எத்தனை நிகழ்வுகள் நடக்காமல் போய்விட்டன என்பதை எண்ணிப் பார்த்தால், வியப்பும், வேதனையுமே நம் நெஞ்சை நிரப்புகின்றன.

கொரோனா கொல்லுயிரியின் கொடூரத் தாண்டவம் இரண்டாம் அலையாக சுழன்றடித்து எத்தனையோ குடும்பங்களை துன்பக் குழிக்குள் தள்ளிவிட்டது. நமக்கு அறிமுகமானவர்கள், உறவினர்கள், அருள்பணியாளர்கள்... எனப் பலரை நாம் இந்த நாள்களில் கோவிட்19 நோயால் இழந்திருக்கிறோம்.

நமது பங்கில் விடுமுறை விவிலியப் பள்ளி, மரியன்னை மாநாடு, உறுதிப்பூசுதல் அருள்சாதனம், பல திருமணங்கள், புது நன்மை விழாக்கள் நடக்காமலே போய்விட்டன.

இவற்றுக்கெல்லாம் என்ன காரணம் என்று சிந்தித்துப் பார்த்தோமா? ஒரு சிலரின் விழிப்புணர்வற்ற செயல்பாடுகள், அலட்சிய மனநிலை, அறியாமை, தன்னலம், பொதுநலனில் அக்கறையின்மை ' இவைதானே இத்தனை துன்பங்களுக்கும் காரணம். இதை நாம் உணர்கிறோமா?

இனிமேலாவது நம்மை மாற்றிக்கொள்வோமா? நமது எண்ணம், மனநிலை, செயல்பாடுகள், பழக்கவழக்கங்கள் அனைத்திலும் நாம் புதிய மாற்றங்களைச் செய்ய வேண்டும். பொது வெளியில் துப்புவதைத் தவிர்ப்பதிலிருந்து, முகக் கவசம் அணிதல், கைகளை அடிக்கடித் தூய்மைப்படுத்துதல், சமூக இடைவெளி கடைப்பித்தல், பொருள்களைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல், இயற்கையையும், உறவுகளையும் பாதுகாத்தல் வரை நம்மில் பல மாற்றங்கள் மலரட்டும்.

“இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக” (உரோ 12:2) என்னும் இறைவாக்கின்படி நம் வாழ்வை மாற்றிக்கொள்வோமாக.

பனிமயத் தாயின் பாதுகாவலும், ஆசீரும் எந்நாளும் உங்களோடு!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 21 தாரகை 10

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருட்பணி. குமார்ராஜா**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | |
|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : **'பனிமயம்'**
**தூய பனிமய அன்னை பேராலயம்**
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### திருமணத்தின் அழகு

ஒரு கிறிஸ்தவ சமூகத்தின் ஆதரவோடு திருமணத்திற்குத் தயாராகும் இளைஞர்களுக்காக ஜெபிப்போம். அவர்கள் அன்பிலும், தாராள மனப்பான்மையுடனும், உண்மையுடனும், பொறுமையுடனும் வளரட்டும்.

# உள்ளே...

1. மரியன்னையின் மேன்மைகள் ....4
அருள் மரி வேந்தன்

2. ஓய்வு நாளும் விடுமுறை நாட்களும் ....6
அருள்பணி. ஸ்டார்லின் ச.ல.

3. மரியன்னை புனிதர்கள் :
இறையடியார் ஃப்ராங்க் டஃப் ....8
அருள்பணி. குமார்ராஜா

4. பனிமய அன்னை ....10
தி. சொர்ணராஜன் விக்டோரியா

5. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள் ....12
செல்வராஜ் மிராந்தா

6. பனிமயம் - மீள்பார்வை ....14
கலாபன் வாஸ்

7. பெருமைப்படுகிறேன்! ....16
"மிலியன்"

8. விவிலியப் போட்டி ....18

9. மாதம் ஒரு மாதா படம் ....21

10. பனிமயப் பகிர்வு ....22

மரியன்னை மன்றாட்டுகள் : 1

# "மிகவும் இரக்கமுள்ள தாயே..."

அன்னை மரியாவை நோக்கிக் காலம் காலமாக பல மரபு மன்றாட்டுகளைச் வேண்டி வருகிறது திருஅவை. அவை அனைத்திலும் மிகவும் புகழ் பெற்றது "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்பதுதான் என்று துணிந்து சொல்லலாம். ஏனெனில், இந்த வேண்டலை மன்றாடாத, அல்லது தெரியாத கத்தோலிக்கர் எவரும் இலர் எனக் கூறலாம்.

"மெமொராரே" (Memorare) என்ற இலத்தீன் முதல் சொல்லால் அறியப்படும் இந்த மன்றாட்டு மிகவும் பிரபலமானது. இதில் "உம்மிடம் அடைக்கலம் நாடிவந்து, ஆதரவைத் தேடி மன்றாடினோர் எவரையும் நீர் கைவிட்டதாக ஒருபோதும் உலகில் சொல்லக் கேட்டதில்லை" என்று மிகவும் துணிந்து நாம் அறிக்கையிடுகிறோம்.

ஆற்றல் மிக்க இந்த மன்றாட்டை இயற்றியவர் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித கிளேர்வா நகர பெர்னார்ட் என்று பரவலாகச் சொல்லப்பட்டாலும், அது வரலாற்று உண்மை அல்ல. மாறாக, இந்த வேண்டல் 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று நம்பப்படுகிறது. இது "புனித பெர்நார்துவின் மன்றாட்டு" என்று அறியப்படுவதற்குக் காரணம், புனித பெர்நார்தின் பெயர் கொண்ட இன்னொரு அருள்பணியாளரே. இந்த மன்றாட்டை மிகவும் பிரபலப்படுத்திய பெருமை கிளாட் பெர்னார்ட் (Fr. Claude Bernard - 1588-1641) என்னும் பெயர் கொண்ட 17ஆம் நூற்றாண்டு பிரான்ஸ் நாட்டு அருள்தந்தையையே சாரும்.

இந்த மன்றாட்டைத் தமது தந்தையிடமிருந்து கற்றுக்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் ஒருமுறை நோய்வாய்ப்பட்டு, சாகுந் தறுவாயிலிருந்த போது, இந்த வேண்டுதலை மன்றாடியதால், அற்புதமாக நலம் பெற்றெழுந்தார். அந்த அற்புத அனுபவத்திற்குப் பிறகு, இந்த மன்றாட்டைப் பிரபலப்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டினார்.

சிறைக் கைதிகள், குற்றவாளிகளுக்கு நற்செய்தி அறிவிப்பதையே முதன்மை அருள்பணியாக ஆற்றிய கிளாட் பெர்நார்ட் இந்த மன்றாட்டைப் பயன்படுத்தியே தமது பணியில் பல வெற்றிகளைப் பெற்றார். இதைப் பயன்படுத்தியதால், கடின குற்றவாளிகள்கூட மனந்திரும்பியதை அவர் கண்டார்.

எனவே, இந்த மன்றாட்டைப் பிரபலப் படுத்துவதில் முனைந்தார் அருள்பணியாளர் பெர்நார்ட். அந்தக் காலத்திலேயே அவர் இந்த மன்றாட்டை இரண்டு இலட்சம் படிகள் அச்சிட்டு ஊர், ஊராகச் சென்று மாதா பக்தியைப் பரப்பினார் என வரலாறு சொல்கிறது. இந்த மன்றாட்டால் எண்ணிலடங்கா அற்புதங்கள் நடந்தன என்று அவர் பதிவுசெய்துள்ளார்.





இந்த மன்றாட்டைப் பயன்படுத்திப் பலன் கண்டோர் எண்ணிலடங்கார். அவர்களில் பிரபலமான ஒரு புனிதர் புனித பிரான்சிஸ் டி சேல்ஸ். அருள்பணி. கிளாட் பெர்நார்டைவிட 21 வயது மூத்தவரான புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் சம காலத்தவர். அவரும் பிரான்ஸ் நாட்டவரே. அவர் இந்த மன்றாட்டைப் பயன்படுத்தி பலன் அடைந்ததாகப் புனித அல்போன்ஸ் லிகோரியார் பதிவு செய்துள்ளார்.

புனித பிரான்சிஸ் சேல்ஸ் 17 வயதில் இறைவனுக்குத் தம்மையே அர்ப்பணிக்க முன் வந்தார். ஆனால், அலகை அவருக்கு அவநம்பிக்கை என்னும் சோதனையைத் தந்துகொண்டேயிருந்தான். குறிப்பாக, கால்வினியன் தப்பறையான "முன்குறித்தல்" (predestination) கொள்கைப்படி தாம் நரகத்திற்கு முன் குறிக்கப்பட்டுவிட்டதாக அவர் நம்பினார். தாம் பெரிய பாவி என்றும், தாம் இறைபணிக்குத் தகுதியுள்ளவர் அல்லர் என்றும் பிரான்சிஸ் சேல்ஸ் எப்போதும் சிந்தித்து வந்தார். இதனால், குழப்பமும், மன உளைச்சலும் அடைந்தார். இதன் விளைவாக அவரால் தூங்க முடியவில்லை, சாப்பிட முடியவில்லை. மெலிந்து, உருக்குலைந்து போனார்.

ஒருநாள் மாலை வேளை பாரிஸ் நகரின் ஒரு கோவிலுக்குள் நுழைந்தார். அங்கே அன்னை மரியாவின் படத்தையும், அந்தப் படத்தின்கீழே "மிகவும் இரக்கமுள்ள தாயே" மன்றாட்டையும் கண்டார் பிரான்சிஸ். அந்த மன்றாட்டை உருக்கத்துடன் மன்றாடி, அன்னை மரியாவிடம் தன்னை ஒப்படைத்தார். என்னே வியப்பு! அக்கணமே அவநம்பிக்கை என்னும் மிகப் பெரும் சோதனையிலிருந்து உடனடி விடுதலை பெற்றார். விளைவாக, உடல் நலமும் பெற்றார்.

அதன்பின் நடந்ததெல்லாம் வரலாறு. பிரான்சிஸ் டி சேல்ஸ் ஆயராகி, நாற்பதாயிரம் கால்வின் கிறிஸ்தவர்களைக் கத்தோலிக்கர் களாக்கினார். திருச்சபையின் மறைநூல் அறிஞர் எனப் புகழ் பெற்றார். அவர் நாள்தோறும் "மிகவும் இரக்கமுள்ள தாயே" வேண்டுதலை மன்றாடியதாகவும், மரியன்னைத் தம்மை ஒருபோதும் கைவிட்டதில்லை என்றும் எழுதியுள்ளார்.

இந்த வேண்டுதலை அதிகம் பயன்படுத்திய இன்னொரு பிரபல புனிதர் அன்னை தெரசா. எப்போதெல்லாம் அவசர தேவைகள் இருந்தனவோ, அப்போதெல்லாம் அன்னை தெரசா இந்த மன்றாட்டை வேண்டினார் என்றும், தமது சபையின் சகோதரிகளுக்கும் அப்படிச் செய்யச் சொல்லி அறிவுறுத்தினார் என்றும் அவரது வாழ்க்கை வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, அவசரத் தேவைகளில் 'மிகவும் இரக்கமுள்ள தாயே' மன்றாட்டை ஒன்பது முறை வேண்டுகின்ற பழக்கத்தை அவர் தமது சகோதரிகளிடம் அறிமுகப்படுத்தினார். இப்பழக்கம் "விரைவு நவநாள்" (Express Novena) என்று அழைக்கப்பட்டது.

ஒருமுறை ஜெர்மனி நாட்டில் பணிபுரிய ஒரு சகோதரிக்கு அந்நாட்டு விசா அவசரமாகத் தேவைப்பட்டது. அன்னை தெரசாவின் அறிவுரைப்படி சகோதரிகள் விரைவு நவநாளில் ஈடுபட்டு, ஒன்பது முறை 'மிகவும் இரக்கமுள்ள தாயே' மன்றாட்டை வேண்டத் தொடங்கினார்கள். எட்டாவது முறை வேண்டிக்கொண்டிருந்தபோதே, "விசா தயாராகிவிட்டது" என்று தொலைபேசி வந்ததாம்.

அறுநூறு ஆண்டுகளாக இந்த மன்றாட்டு உலகெங்கும் உள்ள கத்தோலிக்கர்களால் வேண்டப்பட்டு வருகிறது. இன்றளவும் கத்தோலிக்கர்களின் மனம் கவர்ந்த ஒரு மன்றாட்டு இது என்பதில் ஐயமில்லை. நாமும் இந்த வலிமையான வேண்டுதலை நாள்தோறும் மன்றாடி, அன்னையின் அன்பையும், ஆற்றலையும் அனுபவிப்போமாக!

**அருள் மரி வேந்தன்**

# ஓய்வு நாளும் விடுமுறை நாட்களும்



ஓய்வுநாள் என்பது இஸ்ரயேல் மக்களின் வாழ்விலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகும். இது இஸ்ரயேல் மக்கள் தங்களை படைத்து, விடுதலை அளித்து, நிலம் கொடுத்து, அங்கீகரித்த கடவுளுக்கு செலுத்தும் கடமை யாகக் கருதப்பட்டது. அதிலும் முக்கியமாக இது இஸ்ரயேலர் ஆண்டவருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் அடையாளமாக விளங்கியது. இஸ்ரயேலருக்கான சட்டம் தோன்றிய நாள் முதல் இன்றுவரை, அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான கட்டளையாகவும், அவர்கள் இறைவனின் அன்பிற்குரிய மக்கள் என்பதற்கு அடையாளமாகவும் திகழ்கின்றது ஓய்வுநாள்.

**ஓய்வுநாள் – பொருள்**

விவிலியத்தில் குறிக்கப்படும் ஓய்வுநாள் என்னும் சொல் 'சாபத்து' என்னும் சொல்லின் மொழிபெயர்ப்பாகும். இந்த 'சாபத்து' என்னும் எபிரேயச் சொல்லுக்கு நாம் செய்கிற எல்லா வேலைகளிலிருந்தும் விலகி இருப்பது என்பது பொருள். ஓய்வு எடுப்பது என்பது மற்றொரு பொருள். இவ்வாறு ஓய்வுநாள் என்பது மற்றெல்லா நாட்களிலிருந்து வேறுபட்ட நாளாகவும், நாள்தோறும் செய்கின்ற செயல்பாடுகளைத் தவிர்த்து இறைவனுக்காகவும், நம் உறவினர், குடும்பத்தாருடன் செலவிடும் நாளாகவும் கருதப்பட்டது.

**பழைய ஏற்பாட்டில் ஓய்வுநாள்**

பழைய ஏற்பாட்டில் ஓய்வுநாள் இரண்டு கருத்துக்களை மையமாகக் கொண்டு பின்பற்றப்பட்டது.

1. ஆண்டவர், இவ்வுலகை ஆறு நாள்களில் படைத்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்.
2. விடுதலையின் தெய்வமாகிய இஸ்ரயேலரின் யாவே இறைவன், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை மீட்டுக்கொண்டு வந்த நாளை நினைவு கூர்ந்து, விடுதலையின் நாளாக கொண்டாடப்பட்டது.

ஓய்வுநாள் என்பது வெறும் கடவுள் சார்ந்த ஒன்று மட்டுமல்ல மானிடம் சார்ந்ததும் ஆகும். ஆறு நாள்கள் உழைக்கும் கால்நடைகளும், அடிமைகளும், ஓய்வின்றி பொருள்களை விளைவிக்கின்ற நிலமும், ஓய்வெடுத்துக் கொள்வதற்காக ஆண்டவரே தேர்ந்தெடுத்த நாள்தான் ஓய்வுநாள்.

**இயேசுவும் ஓய்வுநாளும்**

இவ்வாறு மக்கள் நலமுடன் வாழ ஏற்படுத்தப்பட்ட ஒரு அமைப்பாக இருந்தாலும், அதை முறையுடன் செயல்படுத்த வேண்டும் என நினைத்த யூதர்கள் எண்ணிலடங்கா ஓய்வுநாள் சட்டங்களைக் கொண்டு வந்தனர். மக்களுக்கு விடுதலைத் தருகின்ற இச்சட்டம் அவர்களை அடிமைப்படுத்தத் துவங்கியது. அச்சட்டங்களைக் கடைப்பிடிக்க முடியாமல் மக்கள் திணறினர். இச்சட்டங்களைக் கடைபிடிக்க முடியாத பாமர மக்கள், பாவிகள் என ஓரங்கட்டப்பட்டனர், ஒதுக்கப்பட்டனர். சமூகத்தின் விளிம்பு நிலைகளுக்குத் தள்ளப்பட்டனர். இயேசு இதைத்தான் கண்டித்தார். மக்கள்மீது சுமத்தப்படுகின்;ற அதிகமான அர்த்தமற்ற சுமைகளை தகர்த்தெறியப் பாடுபட்டார். ஓய்வுநாள் பற்றிய யூதர்களின் தவறான எண்ணங்களைக் களைந்து சரியானப் பார்வையைக் கொடுத்தார்.

### கிறிஸ்தவமும் ஓய்வுநாளும்

யூத சமூகத்திலிருந்து பிறப்பெடுத்த கிறிஸ்தவ சமயமும் ஓய்வுநாளைப் பின்பற்றியது. ஆனால் யூத சமூகத்திலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்ட ஏழாம் நாளில் பின்பற்றப்பட்டு வந்த ஓய்வுநாள், வாரத்தின் முதல் நாளானது. இது ஆண்டவர் இயேசு சாவின் கொடுக்கை வென்று உயிருடன் விடுதலைப் பெற்று எழுந்த உயிர்த்த நாள். இந்த நாளில் அனைவரும் ஒரே மனத்தோராய் ஒன்றுகூடி வந்தனர், உரையாடினர், உறவாடினர், பகிர்ந்து கொண்டனர். ஒருவரையொருவர் சந்திக்கும் தளமாக, அன்பை வெளிப்படுத்த உதவும் கருவியாக மாறியது ஓய்வுநாள். ஆறு நாள்களும் தங்கள் வேலைகளை மட்டுமே கவனித்த மக்கள் சற்று ஓய்ந்து தன் அயலான் நிலை பற்றியும், தன்னைப் சுற்றி நிகழ்வனப் பற்றியும் அறியவும், அதற்கு தகுந்த பதிலிறுப்புத் தரவும் ஓய்வுநாள் கைகொடுத்தது.

இவ்வாறு இஸ்ரயேலரின் வாழ்வில் இன்றியமையாத இடம் பிடித்த ஓய்வுநாள் கிறிஸ்தவரின் வாழ்வில் முக்கியத்துவம் பெற்றதைத் தொடர்ந்து உலக மக்கள் அனைவருடைய வாழ்விலும் விடுமுறை என்பது மிக முக்கியமானதொன்றாகத் திகழ்கின்றது. சிறியவர் முதல் பெரியவர் வரை, சிறிய உயிரினம் துவங்கி பெரிய உயிரினம் வரை ஓய்வுக்காக ஏங்காதோர் இல்லையென்று கூறலாம்.

### விடுமுறை நாள்கள்

விடுமுறை நாள்களில் சொந்த ஊருக்குச் செல்வதும், தாத்தா பாட்டிகளின் கதை கேட்டு அவர்கள் அரவணைப்பில் மகிழ்ந்திருப்பதும், சித்தி, பெரியம்மா, அத்தை என உறவினர் வீடு தேடி செல்வதும், குடும்பத்தில் உள்ள உறவினர்கள் அனைவரும் இணைந்து பல்லாங்குழி, கண்ணாமூச்சி விளையாடி மகிழ்ந்ததும், வயல், ஏரி, குளம் என காடுகரையெல்லாம் சுற்றி மகிழ்ந்ததும் ஒரு காலம். விடுமுறை நாள்கள் உறவின் பாலங்களாக, உறவுகளைப் புதுப்பிக்கும் தருணங்களாக திகழ்ந்தன என்பவை மறுக்கமுடியாதவை. ஓரிடத்தில் முடக்கி வைக்கின்ற புத்தகங்கள், வகுப்பறை, சமயல் அறை, கணினி அறை போன்றவற்றிடமிருந்து குழந்தைகளும், தாய்மார்களும், தந்தையர்களும் ஒருகூடு தேடிச்செல்லும் பறவைகள் போல் ஒன்றாய் இருக்க வழிச்செய்தவை விடுமுறைநாள்கள். நாம் அனைவரும் தனித்தனியாக வாழ்ந்தாலும், உனக்காய் நானும் எனக்காய் நீயும் இருக்கிறோம் என்பதை உறுதிச் செய்த தருணங்கள் இவை. விடுமுறைக்காக ஏங்கித் தவித்து, அதை முழுமையாக இன்பமாய், குடும்பமாய் அனுபவித்த நாள்களெல்லாம், இன்று மலை யேறிப்போன நாள்களாக விளங்குகின்றன.

பணம், பதவி, படிப்பு என ஆசைப்பட்டு நாம் இழந்த சுகம் தான், தவறவிட்ட பரிசுதான் விடுமுறை. தாய் மண்ணான நிலத்தைக் கூடத் தொட்டு விளையாட விடாமல், பயிற்சி வகுப்புக்கள் என்னும் பெயரால் குழந்தைகளை முடக்குகின்ற நாள்கள் இவை. காலையில் யோகா, பின்னர் கராத்தே, அதைத்தொடர்ந்து கணினிப் பயிற்சி, தட்டச்சுப் பயிற்சி, மாலையில் நீச்சல், ஓட்டப்பயிற்சி, இடைப்பட்ட வேளையில் ஓவியப் பயிற்சி, கையெழுத்துப் பயிற்சி என ஒரு பயிற்சி மையத்திலிருந்து மற்றொரு பயிற்சி மையத்திற்கு குழந்தைகளை உந்தித்தள்ளும் அவலங்களாகி விட்டது விடுமுறை. விடுதலையின் நாள்களாகத் திகழ வேண்டியவை பாரத்தின் நாள்களாக நகர்கின்றன. குழந்தைகளைப் பயிற்சி மையங்களுக்கு அனுப்பி வைத்து விட்டு தாய்மார்களும் தொலைக்காட்சி பெட்டிகளுக்குள்ளும், அன்றாட அலுவல்களிலும் தங்களைப் புதைத்துக் கொள்கின்றனர்.

இனியாவது விடுமுறையின் முக்கியத்துவம் உணர்வோம். இதன் உண்மை பொருள் உணர்ந்து உறவின், அன்பின், விடுதலையின் சின்னங்களாய் நம் குழந்தைகளையும், குடும்பங்களையும் மாற்றும் கருவியாய் விடுமுறை அமையட்டும்.



**ஸ்டார்லின் ச.ல.**

43 மரியன்னைப் புனிதர்கள்

# இறையடியார் ஃப்ராங்க் டஃப்

(1889- 1980)

## மரியன்னைக்காக சேனையை உருவாக்கியவர்!



"மரியாயின் சேனை" என்னும் பெயர் எல்லாக் கத்தோலிக்கர்களுக்கும் அறிமுகமான ஒரு பெயர். இந்த ஆண்டு 100 ஆண்டுகளை நிறைவுசெய்யும் இந்த இயக்கம் உலகம் முழுவதும் பரவியுள்ளது. கத்தோலிக்க பக்த சபைகளிலேயே மிகவும் பெரியது என்னும் பெருமைக்கு உரியது. மரியன்னையின் பெயரில் அமைந்துள்ள இந்த மாபெரும் இயக்கத்தின் நிறுவனர் இறையடியார் ஃப்ராங்க் டஃப்.

அயர்லாந்து நாட்டின் டப்ளின் நகரில் ஜான் டஃப், சூசன் லெற்றிசியா தம்பதியரின் ஏழு குழந்தைகளில் தலைமகனாகப் பிறந்தார் ஃப்ராங்க். செல்வச் செழிப்புள்ள குடும்பம். எனவே, எந்தக் கவலையுமின்றி வளர்ந்தார் அவர். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் பிரான்சிஸ் மைக்கேல் டஃப்.

படிப்பை முடித்ததும் ஃப்ராங்க் அயர்லாந்து நாட்டு அரசுப் பணியில் நில ஆணையாளராகப் பணியில் சேர்ந்தார். அவரது வாழ்வின் திருப்புமுனை 1914ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. ஆர்வம் நிறைந்த கத்தோலிக்கரான ஃப்ராங்க் வின்சென்ட் தே பவுல் சபையில் சேர்ந்தார். டப்ளின் நகரத்தின் எளியோர், ஓரங்கட்டப்பட்டோருக்கு சேவை செய்ததன் வாயிலாக, பங்கு வின்சென்ட் தே பவுல் சபைக்குத் தலைவரானார். "நாமும் புனிதராக முடியுமா?" என்னும் சிற்றேட்டை வெளியிட்டார்.

1921ஆம் ஆண்டு, அதாவது சரியாக 100 ஆண்டுகளுக்கு முன், செப்டம்பர் 7 அன்று - தமது 32ஆவது வயதில் - மரியாயின் சேனை இயக்கத்தைத் தொடங்கினார். புனித லூயி மரிய மான்ட்ஃபோர்ட் எழுதிய "அன்னை மரியாவுக்கு உண்மை வணக்கம்" என்னும் நூல்தான் இச்சபையைத் தோற்றுவிக்க அவருக்கு ஊக்கம் தந்தது. அருள்பணியாளர் மைக்கேல் டோஹர், எதல் குயின் மற்றும் ஒரு சில பெண்களுடன் சேர்ந்து முதல் கிளைச் சபை தொடங்கப்பட்டது. பின்னர் வாழ்நாள் முழுவதும் மரியாயின் சேனையை வளர்த்தெடுப்பதில் ஈடுபட்டார். இன்று உலகம் முழுவதும் 200 நாடுகளில் 40 இலட்சம் சேனையாளர்கள் உள்ளனர்.

வாரமொருமுறை கூடி செபிப்பது, ஆன்மிக உரைக்கு செவிமடுப்பது, அறப்பணிகள் ஆற்றுவது, தங்களின் ஆன்மிக வாழ்வை மேம்படுத்துவது ஆகியவையே சேனையாளரின் கடமைகளாகும். புனித லூயி மரிய மான்ட்ஃபோர்டின் ஆன்மிகத்தைப் பின்பற்றியே இச்சபை இயங்குகிறது. இன்று உலகெங்கும் இத்தனை ஆயிரம் பேர் இந்த வாராந்திரப் பணியைத் தவறாது செய்கிறார்கள் என்றால், அந்தப் பெருமை இறையடியார் ஃப்ராங்க் அவர்களையே சாரும்.

தாம் தொடங்கிய பொதுநிலை இயக்கத்துக்கு "மரியாயின் சேனை" என்று ஏன் பெயரிட்டார்? ஃப்ராங்க் டஃபின் பார்வையில்

இந்த உலகம் ஒரு போர்க்களம். இங்கே நாள்தோறும் ஆண்டவரின் ஆற்றல்களுக்கும் இருளின் சக்திகளுக்கும் இடையே ஆன்மீகப் போர் நடைபெற்றுக்கொண்டேயிருக்கிறது. இப்போரில் நாம் அன்னை மரியாவோடு இணைந்து ஆண்டவர் இயேசுவுக்காகப் போரிட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இவ்வியக்கம் "சேனை" என்று அழைக்கப்படுகிறது,

இந்த இயக்கத்தின் மிகப்பெரிய போர்க் கருவி எது? வேறென்ன செபமாலைதான். அதைக் கொண்டு அலகையின் அத்தனை நுட்பங்களையும் வெல்லலாம் என்று எத்தனையோ மரியன்னைப் புனிதர்கள் சான்று பகர்ந்துள்ளனர். அந்த வரிசையில் புனித லூயி மரிய மான்ட்ஃபோர்டைப் பின்பற்றி, இறையடியார் ஃப்ராங்க் டஃபும் செபமாலையைக் கையில் எடுத்தார். கடந்த நூறாண்டுகளாக மரியாயின் சேனையினர் கோடிக்கணக்கான முறைகள் செபமாலை செபித்து அன்னை மரியாவுடன் இணைந்து இயேசுவுக்காகப் போரிட்டுள்ளனர். அந்த வெற்றியின் பெருமை நிறுவனரான ஃப்ராங்கையே சாரும்.

தொடக்க காலத்தில் மரியாயின் சேனை உலகின் நாடுகளில் பரவிப் பெருகியதைக் கத்தோலிக்கரல்லாத பலரும் பார்த்து வியந்தனர். சீனத் தலைவரான மா சே துங் மரியாயின் சேனையை கம்யூனிஸ்ட்களின் "முதல் எதிரி" என்றாராம்.

தூய வாழ்வு வாழ்ந்த இறையடியார் ஃப்ராங்க் ஒரு நாளில் நான்கு மணி நேரங்களையாவது இறைவேண்டலில் செலவழித்தாராம். தாம் சந்தித்த அனைவரையும் செபமாலை மன்றாட ஊக்குவித்தார். சேனையாளர்களின் ஆன்மிக மையம் செபமாலையே. எனவே, அதனை விரைந்து சொல்லி முடிக்காமல், நிதானமாக, சிந்தித்து, மன்றாட அழைத்தார் ஃப்ராங்க்.

செபமாலை "தூய ஆவியாருக்குப் பிரியமான பக்தி முயற்சி" என்று சொல்லிப் பலரையும் வியக்க வைத்தார் அவர். தூய ஆவியாரின் நேசம் என்றழைக்கப்படும் அன்னை மரியாவுடன் இணைந்து மன்றாடும்போது, தூய ஆவியார் மகிழ்கிறார் என்னும் சிந்தனை எத்துணை உண்மை! செபமாலை செபிக்கும்போது, தூய ஆவியாருக்கு நம் உள்ளம் திறக்கப்படுகிறது என்பதை நாம் அனுபவித்தால்தான் புரியும். "மரியாயின் சேனையின் சுவாசக் காற்றே செபமாலைதான்" என்பது அவரின் இன்னொரு கூற்று.

மரியன்னையின் பெயரில் அமைந்துள்ள உலகின் மிகப்பெரிய இயக்கம் மரியாயின் சேனைதான். வாரம்தோறும் கூடி இறைவேண்டல் செய்வதோடு, அருகாமை இடங்களில் அன்புப் பணியும் ஆற்ற வேண்டும் என்பது அன்னை மரியாவுக்குச் செய்யும் மிகச் சிறந்த வணக்கம் என்பதை இறையடியார் ஃப்ராங்க் நன்கு உணர்த்தியுள்ளார்.

இவரது எடுத்துக்காட்டான வாழ்வு மற்றும் பொதுநிலையினருக்கான மரியாயின் சேனையின் பணிகளைப் பார்த்த திருத்தந்தை ஆறாம் பவுல் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் ஒரு பார்வையாளராகக் கலந்துகொள்ளுமாறு இவரை அழைத்தார்.

1980ஆம் ஆண்டு ஜூன் 7ஆம் நாள் தமது 91ஆம் வயதில் இறைவனடி சேர்ந்தார். இறுதிவரையில் அன்றாடம் திருப்பலியில் கலந்துகொள்ளும் பழக்கம் கொண்டிருந்தார். தமது 25ஆம் வயதிலிருந்து வாழ்வின் இறுதிவரையில் செபமாலை செபிக்கத் தவறியதேயில்லை. மரியாயின் சேனை நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்த ஆண்டு நமது பங்கிலுள்ள மரியாயின் சேனையினரைப் பாராட்டுவோம், புதியவர்களைச் சேர்த்துவிடுவோம். நாமும் இறையடியார் ஃப்ராங்க் டஃப் போல அன்னை மரியாவின் போர்வீரராக வாழுவோம்.



அருள்பணி. குமார்ராஜா

பனிமய அன்னை 8

# அன்னைக்கு ஓர் ஆலயம்

**தூத்துக்குடியில் அன்னை**

முத்துக்குளித்துறையின் இயேசு சபை அதிபராக என்றி என்றிக்கஸ் அடிகளாருக்குப் பிறகு, **தியோகுஸ் த குணா சுவாமி** (Diogo de Couto) பொறுப்பேற்றார். இயேசு சபையினர் தங்களது தலைமை இல்லத்தை 1579 ஆம் ஆண்டில் புன்னைக்காயலில் இருந்து தூத்துக்குடிக்கு மாற்றிய பின்னர், தங்களுக்கென்று ஓர் ஆலயத்தை உருவாக்க விரும்பினர்.

பரவ குல மக்களின் தாராள நன்கொடையினாலும், சுவாமி தியோகுஸ் தி குணா அடிகளாரின் அயராத முயற்சியினாலும், 1582 ஆம் ஆண்டில் அப்புதிய ஆலயம் நிறைவு பெற்றது. இயேசு சபையின் தலைமை இல்லத்தோடு இணைந்தபடி அமைந்திருந்த இவ்வாலயம் **'இரக்கத்தின் மாதா'**வுக்கு (Senihora da Piedade) அர்ப்பணிக்கப்பட்டு, கொச்சி மறைமாவட்டத்தின் 2 ஆம் ஆயரான மேதகு **ஹென்றி தவோரா பிரிட்டோ** (Dom Henrique De Tavora,1567-1578) ஆண்டகையினால் ஆடம்பரச் சிறப்புடன் அபிஷேகப்படுத்தப் பட்டது.



கொச்சி ஆயர்
**ஹென்றி தவோரா பிரிட்டோ**

இவ்வாலயம் அழகமர் ஆலயமாக அமைய அனைத்து ஊர்களிலும் வாழ்ந்த பரவ குல மக்கள் தாராளமாக உதவி புரிந்தனர். அன்று ஆலயம் கட்டுவதற்கு 700 குருசாதோ (Cruzados) வுக்கு மேலாக செலவானது.

தூத்துக்குடியில் மரியன்னை மகிமைக்காக மரிய அன்னையின் பெயரால் எழுந்த முதல் ஆலயமான இவ்வாலயம், 1600 ஆம் ஆண்டு வரை **'இரக்கத்தின் மாதா ஆலயம்'** என்று அழைக்கப்பட்டது.

புனித சின்னப்பருக்கு அர்ப்பணிக்கப் பட்ட **சம்பவுல் காலேஜ்** என்ற இயேசு சபையின் தலைமை இல்லத்தைச் சேர்ந்த கோவிலாக இவ்வாலயம் விளங்கியதால், இது **'சம்பவுல் கோவில்'** என்றும் அழைக்கப்பட்டது. சம்பவுல் கோவிலான இரக்கத்தின் மாதா ஆலய குருசடி, இன்று டச்சுக் கல்லறை இருக்கும் பகுதியில் இருக்கின்றது. இன்றைக்கும் இக்குருசடி புனித பவுலின் மகிமைக்காகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

**ஆலயத் திறப்பு விழா**

உரோமை பனிமய அன்னையின் திருநாளான ஆகஸ்டு 5 ஆம் நாளன்று இவ்வாலயம் ஆடம்பரச் சிறப்புடன் திறந்து வைக்கப்பட்டதால், நாளடைவில் இவ்வாலயம் **'பனிமய மாதா ஆலயம்'** என்று மக்களால் அழைக்கப்பட்டது.



முத்துக்குளித்துறையின் இயேசு சபை அதிபர் **தியோகுஸ் த குணா சுவாமிகள்** (Diogo de Couto) உரோமையிலுள்ள இயேசு சபைத் தலைவர் **கிளாடியோ ஆக்குவோவீவா** (Claudio Acquaviva) அடிகளாருக்கு 1582 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் நாளன்று எழுதிய மடலில், இரக்கத்தின் மாதா ஆலயத் திறப்பு விழாவை கீழ்வருமாறு விவரித்து குறிப்பிடுகிறார் :

"இவ்வாண்டு முத்துக்குளித்துறையின் தூத்துக்குடியில் ஓர் புதிய ஆலயம் கட்டியுள்ளோம். இது கொச்சி ஆயரின் அதிகாரத்திற்கு உட்படாமல், இயேசு சபையினருக்கே முற்றிலும் சொந்தமானதாக இருக்கும். இவ்வாலயத்திற்காக செலவு செய்யப்பட்ட 800 குருசாதோவை பரவ மக்கள் நன்கொடையாக வழங்கினர். ஆலயத் திறப்பு விழாவிற்கு முத்துக்குளித்துறையின் எல்லா ஊர்களிலும் இருந்து பெருந்திரளாக பரவ மக்கள் வந்து கலந்து கொண்டனர். அன்று 670 பேர் நற்கருணை உட்கொண்டனர். மக்கள் அனைவரும் இவ்வாலயத்தின் மீது அதிக பற்றுக் கொண்டு அடிக்கடி ஆலயத்தைச் சந்திக்கின்றனர்".

இவ்வாலயத் திறப்பு விழாவில் பங்கேற்ற இயேசு சபைப் பார்வையாளர் **நூனஸ் ரொட்ரீகஸ்** இயேசு சபைத் தலைவருக்கு கொச்சியிலிருந்து 1582 ஆம் ஆண்டு டிசம்பர் 30 ஆம் நாளன்று எழுதிய மடலில் கீழ்வருமாறு கூறுகிறார் :

"இரக்கத்தின் மாதாவுக்கு அர்ப்பணிக்கப் பட்ட புதிய ஆலயத்தில் முதல் திருப்பலி யானது பனிமய மாதாவின் திருநாளன்று நிறைவேற்றப்பட்டது. இங்கு அழகிய விலை உயர்ந்த ஆபரணங்களும் திருவுடைகளும் ஏராளமாக இருக்கின்றன".

"சுண்ணாம்பும், செங்கல்லும் கொண்டு கட்டப்பட்ட இவ்வாலயத்தில் பீடப்பகுதி கனரா ஓடுகளால் மூடப்பட்டிருந்தது. ஆலயத்தின் சக்ரீஸ்தியில் திருவழிபாட்டுக்கு தேவையான ஆபரணங்களும், திருவுடைகளும், புனிதரின் திருப்பண்டங்களும் ஏராளம் இருந்தன", என்று 1600 ஆம் ஆண்டின் இயேசு சபை அறிக்கையில், **சுவாமி செபஸ்தியான் கொன்சால்வஸ்** (Sebastiao Goncalves) கூறியுள்ளார்.

1601 ஆம் ஆண்டில் இயேசு சபை அறிக்கை, தூத்துக்குடி இயேசு சபைத் தலைமை இல்லத்தின் ஆலயத்திற்கு **'பனிமய அன்னையே பாதுகாவலி'** என்று குறிப்பிட்டுள்ளது.

முத்துக்குளித்துறை முழுவதற்கும், தூத்துக்குடி சம்பவுல் கல்லூரி விழாவே, பிரதான விழாவாக ஆண்டுதோறும் ஆகஸ்ட் 5 ஆம் நாளன்று பனிமய அன்னை திருவிழா நாளில் கொண்டாடப்பட்டது.

- (தொடரும்)



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**



# 1 பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...

## (1930 - 1954)

கடந்தகால நிகழ்வுகளில் - சில கண்டவைகளும் உண்டு - சில கேட்டுத் தெரிந்தவைகளும் உண்டு. ஓய்வில் ஒடுங்கித் திளைக்கும் நேரங்களில் அந்நிகழ்வுகளில் சில, நினைவுத் திரையில் நிழற்படம் போல சலனமிடுவதுண்டு. மனதுக்குள் அவை அசைந்தாடும்போது உணர்வுகள் பலவிதமாக எழுந்து சுழல்வதில் ஒரு சுகம் காண்பதும் உண்டு.

ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகட்கு முன்பு தென் தமிழகக் கடலோரம் வெடித்துக் கிளம்பிய கலவரத்தில் அக்கடலோர மக்களின் தலைக்கு விலை வைத்து வேட்டையாடப் பட்டபோது, ஒட்டுமொத்த சமுதாயமும் கிறித்தவ மறை தழுவிய வரலாற்றின் பிற்பகுதியில் ஏற்பட்ட எத்தனையோ எதிர்மறை மாற்றங்களையெல்லாம் கட்டுக் குலையாமல் கடந்துவந்த சமுதாயம், கிபி 1838ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் பிளவுபடத் தொடங்கியது. பழைய பதுர்வாதகாரர் என்றும் புதிய புரபகாந்தாக்காரர் என்றும் சில கடலோரக் கிராமங்களில் எழுந்த சாரமற்ற சச்சரவுகளே அதற்குக் காரணியாய் அமைந்தன.

நம் தூய பனிமய அன்னை ஆலயப் பங்கு மக்களும் அந்த வரலாற்றுச் சறுக்கலில் சிக்கியிருந்ததன் விளைவாக 1923ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட தூத்துக்குடி மறைமாவட்டத்தில் இணைய மறுத்தனர். அதனால் எழுந்த மோதலின் பாதிப்புகளில் ஒன்றுதான் இன்றுவரை நிவர்த்தி செய்யப்படாத கோயில் வளாக நில உரிமை இழப்பு! சென்னையில் ஆர்மீனியன் தெரு (இன்று அரண்மனைக்காரத் தெரு) தூய மேரீஸ் பேராலயம் மயிலை உயர்மறை மாவட்டத்தோடு இணை பேராலயமாக (co-cathedral) சேர்க்கப்பட்டதைப் போல பரிசுத்த பனிமய அன்னை ஆலயப் பங்கும், மயிலை உயர்மறை மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு 1930ஆம் ஆண்டு தூத்துக்குடி மறைமாவட்டத்தோடு இணைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து பரிசுத்த பனிமய அன்னை ஆலய முதல் பங்குத் தந்தையாக அருள்திரு அம்புரோஸ் மிசியர் நியமிக்கப் பட்டார். தூத்துக்குடியை பிறப்பிடமாகக் கொண்ட அருள்திரு அம்புரோஸ் மிசியர் அடிகளார் நற்கருணை ஆண்டவர்மீது அதீத பக்தி கொண்டவர் என்று அவருடைய மருமகன் காலஞ்சென்ற பெனடிக்ட் கோமஸ் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

அம்புரோஸ் அடிகளார் 1930 முதல் 1932 வரை முதலிலும் பிறகு 1938 முதல் 1939 வரையிலுமாக இரண்டு முறை பங்குத் தந்தையாக பணியாற்றியிருக்கிறார்கள். நல்ல நிர்வாகத் திறமையும் மக்களை அனுசரித்து ஆற்றுப்படுத்தும் ஆற்றலும் மிக்கவராய் பங்கினை வழிநடத்தியிருக்க வேண்டும். அதனால்தான் இரண்டு முறை அவரை நியமித்திருக்கிறார்கள் என ஊகிக்கலாம். அவர் காலத்தில் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க சம்பவங்கள் பற்றியதொரு விவரமும் கிடைக்கப் பெறவில்லை. என்றாலும் மணப்பாடு யாகப்பர் ஆலயத்தில் அவர் பணியாற்றியபோது நிகழ்ந்த ஒரு சம்பவம்



இறையடியார்
அந்தோணி சூசைநாதர்

அவருடைய குருத்துவ வாழ்வின் புனிதத்திற்குச் சான்று பகரும். அந்நிகழ்வு பற்றிக் கேட்டுத் தெரிந்தது :

மணப்பாட்டில் மக்களெல்லாம் 99 வயதான சூசை செபஸ்தியான் மிராந்தாவை அன்பொழுக 'கிராம முனிசிப் சீயான்' என்றழைப்பார்கள். புனித யாகப்பர் ஆலயப் பங்கில் அவர் தொடர்ந்து ஆற்றிய சமூக இறைப்பணிகளைப் பாராட்டி திருஅவை "பெனி மெரந்தே" என்ற விருதை வழங்கி பெருமைப்படுத்தியது.

அருள்திரு அம்புரோஸ் மிசியர் சுவாமி புனித யாகப்பர் தேவாலய பங்குத் தந்தையாக இருந்தபோது மணப்பாட்டில் காலரா என்ற கொடிய உயிர் கொல்லி நோய் பரவி பலர் பலி யாகிக் கொண்டிருந்த காலம். மரணத் தறுவாயிலிருந்த ஒரு காலரா நோயாளி நற்கருணை உட்கொள்ள வேண்டும் எனக் கேட்க சுவாமிக்குத் துணையாக செபஸ்தியான் மிராந்த சீயானும் சென்றிருக்கிறார்கள்.

சுவாமி அவஸ்தை பூசுதல் கொடுத்தபின் நற்கருணை கொடுத்தார்களாம். தேவநற்கருணை உட்கொண்ட நோயாளி வாந்தி எடுக்க அதை அப்படியே கைகளில் பிடித்த சுவாமி, நற்கருணை, வாந்தியில் மிதப்பதைக் கண்டு அதை எடுத்து தானே உட்கொண்டு விட்டாராம்.

சிறிது நேரத்தில் நோயாளி மரணமடைந்துவிட - வாந்தியில் மிதந்த நற்கருணையை உட்கொண்ட அம்புரோஸ் சுவாமி பல வருடம் வாழ்ந்து மறைப்பணியாற்றினாராம். என்னே அவரின் விசுவாசம்! இச்சம்பவத்தை 'கிராம முனிசீப் சீயான்' திரு ரபேல் வாயிசிடம் பிற்காலத்தில் சொன்னதாக திரு வாயிஸ் என்னிடம் சில வருடங்களுக்கு முன் பகிர்ந்து கொண்டார்கள்.

அருள்திரு அம்புரோஸ் மிசியர் அடிகளாருக்குப் பிறகு 1932 முதல் 1938 வரை (இன்று இறையடியாராக உயர்த்தப் பட்டிருக்கும் அந்தோணி சூசைநாதர் (அடிகளாரின் அன்றைய இயற்பெயர்) என்ற அருள்தந்தை A. அந்தோணி பர்னாந்து சுவாமி, பங்குத்தந்தையாக பனிமய அன்னை ஆலய பொறுப்பில் வைத்தார்கள். திருவிழாக் காலங்களிலும் மற்றும் பல காரியங்களிலும் பங்குத்தந்தையருக்கும் மக்களுக்கும் உறுதுணையாக இரவுபகல் பாராது பணியாற்றி வரும் புனித அமலோற்பவ மாதா வாலிபர் சபை அருள்தந்தை அவர்களால் தொடங்கப் பட்ட அமைப்பு என்பது எழுதித் தெரிய வேண்டிய ஒன்றல்ல. அவர் காலத்தில் ஆலயத்தில் பல திருப்பணிகள் நடந்தன. அவற்றை அடுத்த இதழில் காணலாம்.

- தொடரும்.



செல்வராஜ் மிராந்தா

# 'பனிமயம்' – மீள் பார்வை 21

2003

★ அக்காலத்தில் பரதகுல இளைஞர்களைச் சேசு சபையில் சேர்த்ததில்லை. மணப்பாட்டைச் சேர்ந்த **மறைத்திரு. லாரன்ஸ்** பர்னாந்து அடிகளார், சேசு சபையில் சேர எவ்வளவோ முயன்றும் அவர் முயற்சி வீணானது.



★ **அருட்திரு. பிரான்சிஸ் திபூர்சியுஸ் ரோச்**சும், அவரது நெருங்கிய உறவினரான **கபிரியேல் கோமஸ்** இருவர்தான், பரத குலத்தவரில் முதன் முதலாகச் சேசு சபையில் சேர்ந்தவர்கள் (1898).



தூத்துக்குடிக்கு **தேசப்பிதா காந்தியடிகள்** வந்தபோது, ரோச் ஆயரைத் தரிசிக்க, ஆயர் இல்லத்துக்கே வந்தார். அப்போது சிறிய புஷ்பத்தின் சுயசரிதையை அவருக்கு அன்பளிப்பாக ஆயர் அளித்தார். – **தவத்திரு. ஜே. லாசர் மோத்தா, சே.ச.**

★ தம்மை நாடி வந்த மக்களை
அழகாய்க் காக்கும் ஆத்தா வாழ்க!
ஏழ்மையை நேசித்த அன்னையே வாழ்க!
எளியோர்க்குத் துணையே வாழ்க.
கடலில் கலங்கி நிற்பவரை
கருணையுடன் காக்கும் தாயே வாழ்க!
மரிக்கும் மக்களை மறுவாழ்வுக்கு
அழைத்துச் செல்லும் அம்மா வாழ்க!

– **C.S.L.R. தல்மெய்தா.**

★ நமதன்னை பனிமயத்தின் ஆலயத்தில், இரவு கதவுகள் பூட்டப்படும் வரை வரும் பக்தர்கள், தங்கள் மனக் குமுறல்களை மட்டுமா கொட்டித் தீர்க்கிறார்கள்? அத்தனை பேரும் தங்கள் கால் தூசிகளையும், காலணிகளின் மாசுகளையும் அல்லவா விட்டுச் செல்கிறார்கள்!

இந்த நேரத்தில்தான் ஆலயத்திற்குள் சில பெண்கள் துடைப்பக் கட்டைகளுடன் நுழைகிறார்கள். இவர்கள் பணிப் பெண்கள் அல்ல. ஆனால், அன்னை பனிமயத்தைப் போன்று பணிவானவர்கள். ஏழைகள் அல்ல. ஆனால், எளிமையானவர்கள்.

தரையில் படிந்துள்ள தூசியைக் கூட்டிப் பெருக்கும் சாக்கில், பூவிலும் மெல்லிய மனத்தவளாகிய நம் அன்னையிடம், தங்களின் மனச் சுமை தீர்க்க மன்றாடுகிறார்கள்.

நமதன்னை இவர்கள் மனத்தில் நிறைகிறாள். அவர்களின் வருத்தங்கள் மறையச் செய்கிறாள். – **கேப்டன் பெர்க்மான்ஸ் மோத்தா.**

★ நாம் உலகில் பிறந்தோம்... எப்படியோ வளர்ந்தோம்.... வாழ்ந்தோம் என்றில்லாமல், குறிக்கோளுடன் வாழ்ந்து, நம்மால் இயன்ற உதவிகளைப் பிறருக்குச் செய்து, இறந்த பின்னும் நம்மைப் பலர் பாராட்டும் வண்ணம் வாழ வேண்டும். எதையும் தாங்கும் இதயம்

வேண்டும். இறைவனிடம் பற்றுள்ள ஒருவன், என்றும் மனநிறைவு பெறுவான். இறந்த பின்னும் அவரில் அமைதி அடைவான். - **பிலோ ஜான்.**

★ குளிக்க வந்திருந்த ஒரு வேதியர், ஆற்றங்கரையில் வேதம் ஓதிக்கொண்டும், வேட்டியைத் துவைத்துக் கொண்டும் இருந்தார். அப்போது அந்தப் பக்கமாய் **அந்தோனிக்குட்டி அண்ணாவியார்** வந்தார். அண்ணாவியார் மது அருந்தும் இயல்பினர் என்பது அந்தணர்க்குத் தெரிந்திருந்தது.

எனவே, அவர் வேண்டும் என்றே, நையாண்டியாக, “அந்தோனிக்குட்டி அண்ணாவி**கள்ளோ** வருகிறார்?” என்று சிரித்துக் கொண்டே செப்பினார்.

அண்ணாவியார் அவருக்கு மாற்றம் விடுக்கும் முகமாக, அந்தணரின் கள் பிரயோகத்தை மனத்துள் வைத்து வினாக்கள் மேல் வினாக்கள் எழுப்பினார் -

வேதங் கள்ளோ ஓதுகிறீர்?

வேட்டி கள்ளோ துவைக்கிறீர்?

பாதங் கள்ளோ பூசுகிறீர்?

பார்ப்போர் கள்ளோ நிற்கிறீர்?

அந்தணர், பதில் என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்து நின்றார். - **தோமை ராஜன்.**

★ முத்து நகரில், ஸ்டேட் பாங்க் காலனியில் புதிதாய்க் கட்டப்பட்டுள்ள, தூய வேளாங்கன்னி ஆரோக்கிய அன்னை தேவாலயம், முத்துநகர் மக்களுக்கு மகிழ்வும் பெருமையும் தரும் சின்னமாக அமைந்துள்ளது.

அன்னையின் ஆலயம் (22.12.2002) திறக்கப்பட்ட நாள் முதல், மாதாவின் பக்தர்கள் திருப்பயணிகளாக வந்து செல்கின்றனர். இந்த ஆலயம் உண்மையிலேயே ஒரு செப வீடாகவும் திருத்தலமாகவும் மாறி வருவதைக் காணலாம். - **சுவாமி அ. ராஜநீகம், முதல் பங்குத் தந்தை.**



★ தூத்துக்குடி மறைமாவட்டத்தில் வியாகுல அன்னைக்கு முதன் முதலில் அர்ப்பணிக்கப்பட்ட பங்கு, **சிப்பிகுளம்.**

வியாகுல மாதா திருவிழாவிற்கு அடுத்த நாளில் ஆறுதல் அளிக்கும் ஆரோக்கிய அன்னைக்கும் திருவிழாக் காணும் நியதி 1984-ஆம் ஆண்டு முதல் நிலவுகிறது. அந்த நாளில், ஆரோக்கிய அன்னை சித்திரப் பொன்தேரில், சிப்பிகுளம், கீழவைப்பார் ரத வீதிகளில் பவனி வந்து, ஆறுதல் நாடுவோரையெல்லாம் பரிபாலிக்கிறார்.


**கலாபன் வாஸ்**
94863 90793



**பனிமயம்**
ஆண்டு சந்தா ரூ.50
**சந்தா புதுப்பிக்காதவர்கள் உடனே சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**

புதிய தொடர்: 1

# பெருமைப்படுகிறேன்!



ஓர் இந்தியராக இருப்பதில் பெருமைப்படுகிறீர்கள்தானே? உலகமே அண்ணாந்து பார்க்கும் ஆஸ்கர் விருதுகள் இரண்டினை ஏ.ஆர். ரகுமான் வென்றபோது நீங்கள் பெருமைப்பட்டிருப்பீர்கள்.

ஒரு தமிழராய் இருப்பதில் பெருமைப் படுகிறீர்கள்தானே? தமிழ்நாட்டில் வாழ்வதிலும், தமிழ் மொழியைப் பேசுவதிலும் "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதானது எங்கும் காணோமே" என்ற பாரதியின் உணர்வோடு நீங்கள் பெருமைப்படுகிறீர்கள்.

ஒரு கத்தோலிக்கராய் இருப்பதில் பெருமைப்படுகிறீர்களா? கொஞ்சம் யோசிக்கிறீர்களா? ஒரு கத்தோலிக்கராய் இருப்பதில் பெருமைப்படுவதற்கு ஒன்றல்ல, ஓராயிரம் காரணங்களைச் சொல்லலாம். அவற்றில் சில பெருமித உண்மைகளை உங்கள் முன் வைக்கிறேன். சில அறிந்தவை, சில அறியாதவை. சில உணர்ந்தவை, சில உணராதவை. அவற்றை வாசியுங்கள். நின்று நிதானித்து நிமிர்ந்து நில்லுங்கள்! பெருமிதம் கொள்ளுங்கள், பிறருக்கும் அறிவியுங்கள்.

**1. இயேசுவால் நிறுவப்பட்ட திரு அவை.** இன்று உலகில் பல சமயங்கள் உள்ளன. அவற்றிற்கில்லாத ஒரு சிறப்பு கத்தோலிக்கத் திரு அவைக்கு உண்டு. கிறித்தவத்திற்குள்ளேயே பல சபைகள் இருக்கின்றன. அவை எவற்றுக்கும் இல்லாத பெருமிதம் நமது திருஅவைக்குச் சொந்தம். அதுதான் இயேசு கிறிஸ்து என்னும் இறைமகனால் தோற்றுவிக்கப்பட்டது என்பது.

"உன் பெயர் பேதுரு (பாறை). இந்தப் பாறையின்மேல் **என் திருச்சபையைக் கட்டுவேன்.** பாதாளத்தின் வாயில்கள் அதன்மேல் வெற்றிகொள்ளா" (மத் 16:18) என்ற வார்த்தைகள் மூலம் இயேசுவால் கட்டப்பட்ட திருஅவையே நமது கத்தோலிக்கத் திருஅவை.

தொடக்கத் திருஅவையினர் இந்த உண்மையை அறிந்திருந்தனர், அதில் பெருமிதம் கொண்டனர். எனவேதான், பவுலடியார் தமது திருமடலில் கிறிஸ்தவர்களைப் பார்த்து நீங்கள் "கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து **இயேசுவையே மூலைக்கல்லாகவும்** கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள்" (எபே 2:20) என்று பெருமையுடன் எழுதினார். ஆம், நாம் இயேசுவால், இயேசுவின்மேல் கட்டப்பட்ட திருஅவையாக இருக்கிறோம்.

**2. திருத்தூதர் வழிவந்த திரு அவை.** நமது திருஅவையை நாம் "ஏக, பரிசுத்த, கத்தோலிக்க, அப்போஸ்தலிக்கத் திருச்சபை" அழைக்கிறோம். "அப்போஸ்தலிக்கத் திருச்சபை" என்பதைத்தான் இப்பொழுது நல்ல தமிழில் "திருத்தூதுத் திருஅவை" என அழைக்கிறோம். நமது திருஅவை தொடக்கமுதலே திருத்தூதுத் திரு அவையாகத்தான் இருந்து வந்திருக்கிறது. காரணம், அது "திருத்தூதர்களை அடித்தளமாகக்கொண்டு" (எபே 2:20) கட்டப் பட்டுள்ளது. மேலும், திருத்தூதர்களுடைய போதனையையும், நம்பிக்கை அறிக்கையையும் நாம் பின்பற்றுவதால் நாம் திருத்தூதுத் திருஅவையாக இருக்கிறோம். "விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன்" என்று தொடங்கி, "உடலின் உயிர்ப்பை நம்புகிறேன், நிலைவாழ்வை நம்புகிறேன்" என்று முடியும் நமது நம்பிக்கை அறிக்கை இயேசுவோடு வாழ்ந்து, அவரால் அனுப்பப்பட்ட பன்னிரு திருத்தூதர்களிடமிருந்துதான் நமக்கு வந்துள்ளது. அதில் நாம் நிச்சயம் பெருமை கொள்ளலாம்.

**3. உலகம் தழுவிய திரு அவை.** நமது திருஅவையை நாம் "கத்தோலிக்க" அவை என்று அழைக்கிறோம். "கத்தோலிக்க" என்றால் "உலகம் தழுவிய" (universal) என்று பொருள். கிறிஸ்து திருஅவையில் உடனிருப்பதால் அது கத்தோலிக்கத்தன்மையை, அதாவது அகில உலகத் தன்மையைப் பெறுகிறது என்கிறது கத்தோலிக்கத் திருச்சபையின் மறைக்கல்வி (சுருக்கம்: எண் 166).

"கத்தோலிக்க" என்னும் சொல்லாடல் மிகவும் பழமைவாய்ந்தது. கி.பி. 110 ஆம் ஆண்டிலேயே அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் "இயேசுகிறிஸ்து எங்கே இருக்கிறாரோ, அங்கே கத்தோலிக்கத் திருஅவை இருக்கிறது" (Ad Smyrn. 8:2) என்று சொல்லியிருக்கிறார். நமக்கு வியப்பாக இல்லையா?

"திருஅவை நம்பிக்கையின் நிறைவையும், முழுமையையும் அறிக்கையிடுகிறது" என்று இந்தக் கத்தோலிக்க என்னும் பதத்துக்குக் கூடுதல் விளக்கம் தருகிறது மறைக்கல்வி. நமது திருஅவை "கத்தோலிக்கத் திருச்சபை" என்று அதன் உறுப்பினர்களால் மட்டுமல்ல, எதிரிகளாலும் அவ்வாறே அழைக்கப் படுகிறது என்றார் நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித அகுஸ்தினார். திருஅவை என்றால் "கத்தோலிக்கத் திருச்சபை" ஒன்றுதான், மற்றவையெல்லாம் வெறும் சபைகள்தான் என்பது நமது நீண்ட நெடிய வரலாறு தருகிற செய்தி.

**4. பன்னாட்டுத் திரு அவை.** நமது திருஅவை "அகில உலகத் திருஅவை" என்பதற்கான ஓர் அடையாளம் அது உலகின் அனைத்து நாடுகளிலும் பரவியுள்ளது என்பது. உலகின் வேறு எந்த சமயத்துக்கும் இல்லாத தனிச் சிறப்பு என்றுகூட நாம் அதனை அழைக்கலாம். உலகில் எத்தனை நாடுகள் உள்ளனவோ, அத்தனை நாடுகளிலும் கத்தோலிக்கர்கள் இருக்கிறார்கள், வழிபடுகிறார்கள், செயல்படுகிறார்கள்.

கத்தோலிக்கத் திருஅவை இல்லாத நாடுகளே இல்லை எனத் துணிவுடன் சொல்லலாம். கம்யூனிச நாடான சைனாவாக இருந்தாலும், இஸ்லாமின் நடுநாயக நாடான சவுதி அரேபியாவாக இருந்தாலும், உலகின் ஒரே இந்து நாடு என்று சொல்லப்பட்ட நேபாளமாக இருந்தாலும் அங்கும் கத்தோலிக்கத் திருஅவை உயிர்த் துடிப்புடன் இருக்கிறது. உலகில் கத்தோலிக்கர்கள் இல்லாத நாடு எதுவுமே இல்லை என்னும் மாபெரும் பெருமை நமக்கு மட்டுமே உண்டு. உலகின் ஏழு கண்டங்களிலும், பெரிய, சிறிய நாடுகள் அனைத்திலும் இயங்கி வருவதால் உண்மையிலேயே உலகம் தழுவிய பன்னாட்டுத் திருஅவையாக நாம் இருப்பதில் பெருமிதம் கொள்வோம்.

(தொடரும்)

**"மிலியன்"**

# விவிலியப் போட்டி 77

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## உரோமையர் திருமுகம்

**கோடிட்ட இடத்தை நிரப்புக. விடைகளில் அதிகாரம், வசனம் எழுதவும்.**

1. பிசைந்தமாவில் முதலில் ஒருபிடி எடுத்துக் __________ அர்ப்பணித்தால்
2. தூய ஆவியாரும் கடவுளுக்கு __________ முறையில் இறைமக்களுக்காக
3. __________ ஆவியால் தூண்டப்படும் என் மனச்சான்றே நான் சொல்வதற்குச் சாட்சி.
4. கடவுளுக்கு உகந்த, தூய, உயிருள்ள__________ உங்களைப் படையுங்கள்.
5. தீமை __________ வெல்லவிடாதீர்கள்.
6. இறந்தும் வாழ்வோராய் உங்களைக் கடவுளிடம் __________.
7. அப்போது கடவுளைப் பெருமைப்படுத்துவீர்கள். என் கருத்து __________.
8. 'அப்படியானால், __________ மனிதர்மீது எப்படிக் குற்றம் சுமத்தமுடியும்?.
9. நான் __________ நன்மையைச் செய்வதில்லை
10. கடவுளுக்கு உகந்த __________ யாகும்படி அவர்களுக்கு கடவுளின் நற்செய்தியை

**விடைகள் அனைத்தையும் கோர்த்தால், உங்களுக்கான இம்மாதச் செய்தி கிடைக்கும். உதவி: உரோ 12: 1**

**உங்கள் கவனத்துக்கு:**
பனிமய அன்னைப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்துவிடுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.எண்: 88075 17773

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.06.2021**

பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் அன்பியப் பெயரையும் எழுதுங்கள்.

# விவிலியப் போட்டி 76

## மே 2021 — விடைக்குறிப்புகள்

### கொரிந்தியர் முதல் திருமுகம்

| | |
|---|---|
| 1. தூய ஆவியார் | எபி 3:7 |
| 2. அவருடைய | எபி 13:15 |
| 3. கொடைகளை | எபி 2:4 |
| 4. உங்கள் | எபி 3:8 |
| 5. உள்ளத்தில் | எபி 10:16 |
| 6. பொழிந்து | எபி 6:14 |
| 7. சான்று | எபி 11:4 |
| 8. வாழ்வு | எபி 10:38 |
| 9. வாழ | எபி 12:9 |
| 10. செய்தருள்வாராக! | எபி 13:21 |

*இம்மாதச் செய்தி:*

**"தூய ஆவியார் அவருடைய கொடைகளை உங்கள் உள்ளத்தில் பொழிந்து சான்று வாழ்வு வாழச் செய்தருள்வாராக!"**

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 88**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 48**

**விடை எழுதிய அன்பியங்கள் (22)**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. **ஸ்மைலா டிஃபானி,** ஜெபமாலை மாதா அன்பியம்
2. **செல்வராணி ரொட்ரிகோ,** ஜூடு அன்பியம்
3. **வெனிற்றாள்,** காவல்தூதர் அன்பியம்
4. **கிறிஸ்டி லிஸ்டன்,** குழந்தை தெரசா அன்பியம்

**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 214**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 88**



## பாராட்டுக்குரியவர்கள் : 44

**அந்தோனியார் அன்பியம்**
1. டோனிஆஹா

**அன்னைதெரசா அன்பியம்**
2. நமிஷா
3. ரெய்ஸா சுஜய்

**அன்னைவேளாங்கன்னி**
4. டென்சி
5. லிசியா ஜெகதீஷ்
6. நான்சிசில்வஸ்டர்

**கிறிஸ்தரசர்**
7. ஜூலியட் சாவியோ
8. ஸெலஸ்கிகிளமென்ட்

**தஸ்நேவிஸ் மாதா**
9. இருதயம்மாள்

**பாத்திமா மாதா**
10. டாரல் தீத்தோனிஸ்
11. ஜஸ்டின் ஸ்நோகுளோரி
12. லொரிட்டாஎட்வின்

**இரக்கத்தின் மாதா**
13. கெனிட்டா

**ஜெபமாலை மாதா**
14. ட்ரிஃபானாகிரான்டின்
15. அக்ஷன்

**காவல் தூதர்**
16. ஜோனதான்
17. ஹசினா
18. ஜெயா அகஸ்டின்
19. ஆரோக்கிய ஃபெல்சி

**குழந்தை இயேசு**
20. லியான்டின் சஹானா

**லூர்து மாதா**
21. ஆலிவர் ஜெனோரா
22. ஃபிலோகோமஸ்
23. ஜெனோசேவியர்
24. ரம்யா

**மணல் மாதா**
25. கெயிட்டன் ஃபர்னான்டோ

**பரிபூரண மாதா**
26. வின்செண்ட் ரொசிட்டா

**பவுலடியார்**
27. ராஜா ரோஸ்லின்
28. லீமாரோஸ் ஜாய்

**பொம்பெயி மாதா**
29. அனிஷா கொரேரா
30. லூடா கான்ஸ்டன்

**இராயப்பர்**
31. டெய்சி அன்டோ மோத்தா
32. இந்திரா ரெஃப்லின்

**சவேரியார்**
33. டெலிலா அமலன்
34. ஃப்ளோரியா ஸ்டெல்லா
35. ஜான்சி ஜெயகுமார்
36. மான்சி

**செபஸ்தியார்**
37. அந்தோனியம்மாள் டென்சிங்
38. ஜெசிலா சேவியர்
39. ரெஜில் ரெனிஷா

**சிந்தாத்திரைமாதா**
40. டிஜேபிஆர் இராயன்
41. டினோமிராண்டா

**சூசையப்பர்**
42. ரிஜோ

**திருச்சிலுவை**
43. ஆசினி எப்பெக்ஸ்
44. ரமணிதாஸ்

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 40

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. **வெர்ஜின் சகாயராஜ்,** தூத்துக்குடி 2
2. **குணசீலன்,** திருநெல்வேலி 11
3. **ஆஞ்சலோ,** திருச்சி – 11
4. **ஆரோக்கிய மேரி,** பட்டுக்கோட்டை 02

## பாராட்டுபெறுபவர்கள் : 36

**ஆலந்தலை**
45. ஃபொன்சேகா
46. ஜெய்டன் சுதாமதி

**சென்னை**
47. கமலஜோதி ஜெயசீலன்
48. சகாயராணி இம்மானுவேல்

**கயத்தாறு**
49. ஜெசிந்தாராணி

**குரும்பூர்**
50. சுபாடெரன்ஸ்

**மதுரை**
51. ஜோசப் இராஜமாணிக்கம்
52. ஜோசபின் சலேத்மேரி

**நாகர்கோவில்**
53. மிக்கேல்

**திருவனந்தபுரம்**
54. ஜோசஃபின்

**பெரியகுளம்**
55. குழந்தைதெரஸ்

**தூத்துக்குடி இதரபங்குகள்**
56. எல்சி
57. பிளாசிசெல்வராஜ்
58. செல்வம் டெலிஷியா
59. ரிமோல்டா
60. சகாயராஜ் ரொட்ரிகோ
61. ஆசிர்வாதம்
62. ரமிலாகமிலஸ்
63. ரமேஷ் நர்மதா
64. ஷாந்தினி
65. சோஃபியா
66. அருள்சகோ. ஜீவா
67. பெனிட்டா
68. சுசீலன்
69. லிசியாகபில்
70. சுகிர்தா
71. ஜெசிந்தா ஃபர்னான்டோ

**உடன்குடி**
72. சிலுவைஅருள்

**வேம்பார்**
73. மகிழினி

**திண்டுக்கல்**
74. ஜெர்மோன்
75. மரியமதலேன்

**திருச்சி**
76. மோனிக்காகிறிஸ்டி
77. ஸ்டெல்லா

**வடக்குத்து**
78. ஹென்றிதாஸ்

**வீரக்குறிச்சி**
79. ரோஸ்மேரி

**இதர**
80. மனுவேல் இன்ஃபனி



# தூய பனிமய அன்னை பேராலயப் பங்கு,

## தூத்துக்குடி



## மண்ணின் மைந்தர்கள் - அருள்பணியாளர்கள்

| | பெயர் | மறைமாவட்டம்/ துறவற சபை | பணியிடம் |
|---|---|---|---|
| 1. | இறையடியார் அ. சூசைநாதர் | செபமாலை தாசர் சபை | விண்ணில் |
| 2. | இறையடியார் அகுஸ்தின் பெரைரா | திருச்சி மறைமாவட்டம் | விண்ணில் |
| 3. | ஆயர் அன்றனி டிவோட்டா | திருச்சி மறைமாவட்டம் | விண்ணில் |
| 4. | அருள்பணி. கருணாகரன் கோமஸ் | தூத்துக்குடி மறைமாவட்டம் | விண்ணில் |
| 5. | அருள்பணி. ஜூலியன் | தூத்துக்குடி மறைமாவட்டம் | விண்ணில் |
| 6. | அருள்பணி. வினோஃபர்ன் | தூத்துக்குடி மறைமாவட்டம் | விண்ணில் |
| 7. | அருள்பணி. ஜோசப் | அமல மரித் தியாகிகள் சபை | சென்னை |
| 8. | அருள்பணி. ஆஸ்வால்ட் | மெக்சிகோ மறைமாவட்டம் | மெக்சிகோ |
| 9. | அருள்பணி. வெலிங்டன் | இயேசு சபை | பாளையங்கோட்டை |
| 10. | அருள்பணி. ரெனால்ட் மிசியர் | தூத்துக்குடி மறைமாவட்டம் | இரத்னபுரம் |
| 11. | அருள்பணி. விஜயன் | அமெரிக்கா | அமெரிக்கா |
| 12. | அருள்பணி. அன்றனி சுரேஷ் | பெர்த் உயர் மறைமாவட்டம் | ஆஸ்திரேலியா |
| 13. | அருள்பணி. பீட்டர் | கப்புச்சின் | அபுதாபி |
| 14. | அருள்பணி. திவாகர் | கப்புச்சின் | துபாய் |
| 15. | அருள்பணி. ஜான் செல்வம் | தூத்துக்குடி மறைமாவட்டம் | லூசியா நிறுவனம் |
| 16. | அருள்பணி. ராஜா ரொட்ரிகோ | தூத்துக்குடி மறைமாவட்டம் | வேம்பார் |
| 17. | அருள்பணி. பிரைட் | தூத்துக்குடி மறைமாவட்டம் | கூட்டப்பனை |
| 18. | அருள்பணி. யோகராஜ் | தூத்துக்குடி மறைமாவட்டம் | இத்தாலி |
| 19. | அருள்பணி. சகாயராஜ் | நார்பட்டைன் சபை | மஹாராஷ்ட்ரா |
| 20. | அருள்பணி. சுரேஷ் | அமல மரித் தூதுவர் | தெற்கு சூடான் |

## மண்ணின் மைந்தர்கள் - அருள்சகோதரர்கள்

| | | | |
|---|---|---|---|
| 21. | அருள்சகோ. மோத்தா | தெலசால் சபை | கோயம்புத்தூர் |
| 22. | அருள்சகோ. ஜோசப் | தெலசால் சபை | கோயம்புத்தூர் |
| 23. | அருள்சகோ. சார்தோ | மைக்கேல் சகோதரர்கள் | கோயம்புத்தூர் |
| 24. | அருள்சகோ. பீட்டர் | கப்புச்சின் | வத்தலக்குண்டு |

மாதம் ஒரு மாதா படம் : 21

# நம் பாரிவின் தாய்



S. ADELINO

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 23)

## ஜூன் - 2021

| | | |
|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : அருள்பணி விமல்ஜன் | 9791529877 |
| பங்கு அலுவலகம் | : | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| **தினசரி திருப்பலிகள்** | **சனிக் கிழமைகளில்** | | **ஞாயிற்றுக் கிழமைகளில்** | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை 5.30 | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் மாலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ பனிமய மாணவர் கூட்டம் : ஞாயிறு காலை 11.30 - 12.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ பரிந்துரை மன்றாட்டு : திங்கள் மாலை 06.15 - 06.45
- ✓ விவிலியப் பாசறை : ஞாயிறு மாலை 03.00 - 05.00; செவ்வாய் மாலை 06.15 - 08.15
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ உறுதிப்பூசுதல் அருள்சாதனம் : 30.05.2021
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 01.08.2021
  பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி; மாலை 04.00 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.



## பனிமயச் சுவடுகள்

**(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)**

224. கடந்த **25.04.2021 ஞாயிறு** முதல் கொரோனாப் பெருந்தொற்று ஊரடங்கை முன்னிட்டுப் பேராலயத்தில் **பொது வழிபாடுகள் நடைபெறவில்லை**. அதிகாலையில் அருள்பணியாளர்கள், துறவியருக்கான தனித் திருப்பலி மட்டும் நடைபெற்றது. ஆனால், மக்கள் சந்திப்புக்காக பேராலயமும், நற்கருணை சிற்றாலயமும் திறந்திருந்தன.

225. தேவதாயின் மாதமான மே முதற் சனியாகிய **01.05.2021** அன்று முதற் சனி சப்பரப் பவனியோ, நவநாள் வழிபாடோ நடத்தப்படமுடியவில்லை. அதற்கு மாற்றாக, மரியன்னைக்குப் புகழ்மாலை, முதற் சனி நவநாள், மறையுரை, நற்கருணை ஆசீர் ஆகியன நடத்தப்பட்டு, மாலை 06.30 மணிக்கு சூர்யா தொலைக்காட்சியிலும், பேராலய இணைய தள யூ ட்யூப் சேனலிலும் ஒளிபரப்பப்பட்டது.

226. பெருந்தொற்றுக் கட்டுப்பாடுகளை முன்னிட்டு விடுமுறை விவிலியப் பள்ளி, மரியன்னை மாநாடு, மே மாத அன்பியக் கூட்டங்கள், உறுதிப்பூசுதல் அருள்சாதன விழா ஆகியன நடைபெறவில்லை.

227. கடந்த மாதங்களில் பேராலயத்தில் திருமணத் திருப்பலி நடைபெற்ற 25 மணமக்கள் பனிமய அன்னைக்குக் காணிக்கையாகத் தந்த பணத்திலிருந்து நமது பங்கின் நலிந்த குடும்பங்களைச் சேர்ந்த **100 பெண்களுக்கு உயிர்ப்பு விழாப் பரிசாக சேலைகள்** வழங்கப்பட்டன.

228. பேராலயப் பங்கின் 20ஆவது அருள்பணியாளராக **தந்தை ஜெ. சுரேஷ்** (அமல மரித் தூதுவர் சபை- தெற்கு சூடான்) 04.05.2021 அன்று சென்னையில் அருள்பொழிவு செய்யப்பட்டார். அன்னாரது **முதல் நன்றித் திருப்பலி 08.05.2021** சனி காலை 07.00 மணிக்கு நமது பேராலயத்தில் நடைபெற்றது. புதிய குருவின் குடும்பத்தினரும், பங்கு மேய்ப்புப் பணிக்குழுப் பிரதிநிதிகளும் மட்டுமே கலந்துகொண்டனர். திருப்பலியின் நிறைவில் புதிய குருவுக்குப் பங்கு மக்களின் சார்பாக வரவேற்பு, வாழ்த்து மடல், நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்தத் திருப்பலி 09.05.2021 ஞாயிறு அன்று சூர்யா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

229. உதவிப் பங்குத் தந்தை அருள்பணி. ஸ்டார்லின், களப் பணியாளர் சகோ. கிரான்டின் இருவருக்கும் **பிரியாவிடை நன்றித் திருப்பலி 09.05.2021** ஞாயிறு காலை 07.00 மணிக்குப் பேராலயத்தில் நடைபெற்றது. அன்பிய வழிகாட்டிகள் மற்றும் பக்த சபைப் பிரதிநிதிகள் மட்டும் கலந்துகொண்டனர். திருப்பலியின் நிறைவில் பிரியாவிடை விழா நடைபெற்றது. பங்கின் சார்பிலும், அன்பியங்கள், பக்த சபைகளின் சார்பிலும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. இத்திருப்பலி 16.05.2021 ஞாயிறு அன்று சூர்யா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

230. தமிழக அரசு அறிவித்த **இரு வாரப் பொது முடக்கத்தை** (10.05.2021 முதல் 24.05.2021 வரை) முன்னிட்டுப் பேராலய அலுவலகமும், திருப்பொருள் விற்பனையகமும் மூடப்பட்டன. பங்கு மக்கள் தந்த திருப்பலிக் கருத்துகள் பங்குத் தந்தையரால் கட்டணமின்றி நிறைவேற்றப்பட்டன.

231. மே மாத **மூன்றாம் சனி சிறப்பு வழிபாடு (7)** 15.05.2021 சனி அன்று நண்பகல் 12.00 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. "கொரோனா பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்காக" மக்கள் பங்கேற்பின்றி நடைபெற்ற இந்தப் பரிந்துரை வழிபாட்டில் அடைக்கல அன்னை அவை அருள்சகோதரிகளும், பாடகர் குழுவினரும் மட்டுமே கலந்துகொண்டனர்.

232. கொரோனா பொது முடக்கத்தை முன்னிட்டு நமது பங்கின் **150 நலிந்த குடும்பங்கள்** ஒவ்வொன்றுக்கும் ரூ. 800 பெறுமானமுள்ள உணவுப் பொருள்களுக்கான அட்டைகள் அன்பிய வழிகாட்டிகள் மூலம் மே மாத மூன்றாம் வாரத்தில் வழங்கப்பட்டன. **ரூ. 1,20,000** மதிப்புள்ள இந்தப் பொருள்களைப் பனிமய அன்னைக்குக் காணிக்கையாக வழங்கிய நமது பங்கு மகனைப் பனிமய அன்னை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

233. பங்கு மக்களின் விருப்பத்திற்கேற்ப கொரோனா உயிர்க்கொல்லியிடமிருந்து பாதுகாக்கப்படுவதற்காக **புனித செபஸ்தியாரின் திருவுருவம்** நமது பங்கின் தெருக்கள் வழியாக **20.05.2021** வியாழன் அன்று பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது.

234. தூய ஆவியாரின் பெருவிழாவை முன்னிட்டு 23.05.2021 ஞாயிறு அன்று பேராலயத்தில் நிறைவேற்றப்பட்ட பெருவிழாத் திருப்பலி அன்று காலை 08.30 மணிக்கு சூர்யா தொலைக்காட்சியிலும், ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும் ஒளிபரப்பப்பட்டது.

235. பனிமய அன்னை திருத்தலப் பேராலயத்தில் நடத்தப்பட்ட திருச்செபமாலை வழிபாடு **31.05.2021 திங்கள்** அன்று மாதா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

236. இறையடியார்கள் அந்தோணி சூசைநாதர், அகுஸ்தின் பெரைரா இருவரும் அருளாளர் நிலைக்கு உயர்த்தப்படப் பரிந்துரைத்துத் தொடங்கப்பட்டுள்ள **1000 நாள் தொடர் பரிந்துரை குடும்ப மன்றாட்டு** கொரோனா பொதுமுடக்க காலத்தை முன்னிட்டு பனிமய அன்பியத்திலிருந்து அமலவை அருள்சகோதரிகள் இல்லத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. இயல்பு நிலை திரும்பும்வரை கன்னியர் இல்லத்திலேயே இத்தொடர் மன்றாட்டு நடைபெறும்.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 67. | ஸ்னோ நனிஷா | ரஸ்கின் - ஜூடி | 01-05-2021 | செபஸ்தியார் |



### *ஆசி கூறுகின்றோம்*

### 2. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | திருமணநாள் |
|---|---|---|
| 62. | ஜெஃப்ரி - லிமோஷா | 14-05-2021 |
| 63. | பிரவீன் - ஜென்கிறிஸ்ட் | 16-05-2021 |
| 64. | ஃப்ராங்க் - எழிலரசி | 17-05-2021 |



### *செபிக்கின்றோம்*

### 3. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | கணவர் / மனைவி | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 90. | லூயிஸ் பர்னாண்டஸ் | பீட்டர் பர்னாண்டஸ் (தந்தை) | 03-05-2021 | மணல்மாதா |
| 91. | ஆனந்த் டிவோட்டா | டியூமா | 06-05-2021 | பவுலடியார் |
| 92. | அருள்தாசன் | டெய்சி | 10-05-2021 | பொம்பெய்மாதா |



| | | | | |
|---|---|---|---|---|
| 93. | சிறியபுஷ்பம் வி.ராயி | ப்யூலஸ் (மகன்) | 12-05-2021 | திவ்யபாலன் |
| 94. | அருள் ஜோசப் | ஜூடி | 15-05-2021 | இரக்கத்தின்மாதா |
| 95. | சின்னதம்பி | மியூரின் | 18-05-2021 | பாத்திமா மாதா |

## பங்கில் நிகழவிருப்பவை

- புனித சூசையப்பர் ஆண்டு சிறப்பு வணக்க வழிபாடு மாதத்தின் முதல் புதன் **02.06.2021** மாலையில் மக்கள் பங்கேற்பின்றி நடைபெறும்.
- ஜூன் மாத முதல் சனி சிறப்பு வழிபாடும் நற்கருணை ஆசீரும் மக்கள் பங்கேற்பின்றி **05.06.2021** அன்று நடைபெறும். இந்நிகழ்வுகள் சூர்யா தொலைக்காட்சியிலும், ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும் ஒளிபரப்பப்படும்.
- கிறிஸ்துவின் தூய்மைமிகு திருவுடல், திருஇரத்தப் பெருவிழாவை முன்னிட்டு 06.06.2021 ஞாயிறு நண்பகல் 12.00 முதல் 01.00 மணிவரை பேராலயத்தில் **நற்கருணை எழுந்தேற்றம்** செய்யப்பட்டு, ஆராதனையும், பரிந்துரை வேண்டுதல்களும் மக்கள் பங்கேற்பின்றி நடத்தப்படும்.
- பனிமயத் தாயின் அற்புதத் திருஉருவம் தூத்துக்குடி வந்து சேர்ந்த **466ஆம் ஆண்டு நிறைவு** 09.06.2021 புதன் அன்று மக்கள் பங்கேற்பின்றி, ஆடம்பரப் பாடற் திருப்பலியுடன் கொண்டாடப்படும்.
- இறைவனுக்குத் திருவுளமானால், **புனித அந்தோனியார் திருவிழா** 13.06.2021 ஞாயிறு அன்று அந்தோனியார் சிற்றாலயத்தில் கொண்டாடப்படும்.
- 19.06.2021 சனி காலை 11.30 முதல் 03.00 வரை **மூன்றாம் சனி பரிந்துரை வழிபாடு** "பொருளாதார நெருக்கடிகள் நீங்குவதற்காக" ஒப்புக்கொடுக்கப்படும். தங்கள் குடும்பங்கள், நிறுவனங்கள், வணிகத் தலங்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகச் செபிக்க விரும்புகிறவர்கள் அவர்களின் பெயரை பங்குத் தந்தையிடம் நேரிலோ, அல்லது வாட்ஸ்அப் (82209 47823) வழியாகவோ தெரிவிக்கலாம்.
- சந்த மரிய தஸ்நேவிஸ் மாதா பெருவிழாவுக்கான **பெருவிழா ஆயத்த தொடர் பரிந்துரை மன்றாட்டு** 25.06.2021 வெள்ளி முதல் 24.07.2021 சனி வரை 30 நாள்கள் நடைபெறும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

மறு அறிவிப்பு வரும் வரையில் செவ்வாய் நற்செய்திக் கூட்டம், நலம் தரும் திருப்பலி, வெள்ளி திருச்சிலுவை அன்பு உணவு வழிபாடு, முதல் சனி திருவிழிப்பு வழிபாடு ஆகியன நடைபெறாது.

## *வரவேற்கிறோம்*

நமது பங்கின் புதிய உதவிப் பங்குத் தந்தையாக **அருள்பணி. விமல்ஜன்** அவர்களும், புதிய களப் பணியாளராக சகோ. **மனோஜ்** அவர்களும் மேதகு ஆயர் அவர்களால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இருவரையும் அன்புடன் வரவேற்கிறோம்.

# இரண்டாம் வருட நினைவு

"என் உள்ளங்கைகளில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன்."
(எசாயா 49:16)

பிறப்பு
11.03.1957



இறப்பு
01.06.2019

# R. நிர்மலா பர்னாந்து

நம் உள்ளத்தின் உள்ளே வாழும் ஓர்
உன்னதமான தெய்வம் நம் அம்மா!
கருவில் சுமந்த தாயை
மனதில் சுமக்கும் சேய்கள்!

*பிரிவால் துயருறும்*

**கணவர் : P. ரவிந்திரன் பர்னாந்து**
**மக்கள், மருமக்கள்**
**பேரன், பேத்திகள் மற்றும் குடும்பத்தினர்**

# 30-ஆம் நாள் நினைவஞ்சலி

"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாய்த் திகழ்வாய்
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்."

(எசா 62:3)



மலர்ந்தது
01.06.1966

உதிர்ந்தது
25.04.2021

# X. அகஸ்டின் பெர்னான்டோ

**வயது 55**

*பிரிவின் நினைவில் துயருறும்*

**மனைவி : X. ஆரோக்கியமேரி**
**தாயார் : லூர்து முறாயிஸ்**
**மகன் : A. இன்பென்ட் யஷ்வந்த்**
**A. ஆக்னஸ் ஹாரிஸ்**
**மற்றும் உடன்பிறப்புகள்**

24/3, டைப் II, கேம்ப் II, தூத்துக்குடி - 4.

விண்ணக வாழ்வின்

# மூன்றாம் ஆண்டு அஞ்சலி



மண்ணில்
15.12.1950

விண்ணில்
08.06.2018

# V. மரிய ரோஸ் (பேபி)

வயது : 70

"ஆண்டவர் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்.
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்"

(எசா 62:3)

நீங்கா உன் நினைவில்

அன்பு கணவர் : **MANUAL VARGHEESE**

மகள் : **G. JASINDA**

மகன் : **V. STANLEY**

மருமகன், மருமகள், 4 பேத்திகள், 1 பேரன்
மற்றும் உற்றார், உறவினர்

*SHINY* Ph : 98421 31493